**தலைப்பு 254 – பதிவாளர் நாயகம் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 செப்தம்பர் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) உப பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 வருமானங்களின் பெறுவனவு

திணைக்களத்திற்குரிய வருமானங்களை கணக்கு வைக்கும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திறைசேரியின் புத்தகங்களின் பிரகாரம் மொத்த வருமானம் மற்றும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரமான மொத்த வருமானம் ஆகியவற்றுக்கிடையே ரூபா 801,944 ஆன வேறுபாடு ஒன்று அவதானிக்கப்பட்டது. | இந்த வேறுபாட்டிற்கு ஏனைய திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட மீள் திருப்பல்கள் காரணமாக அமைந்திருந்தது. | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பெறுமதிகள் திறைசேரியின் புத்தகங்களின் பிரகாரம் இணக்கம் செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2020 ஆம் ஆண்டின் போது திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்ட பதிவுக் கட்டண வருமானம் ரூபா 858,103,568 ஆக ACA-1 மாதிரியில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் திணைக்களத்தின் மாதாந்த பொழிப்பின் வருமான அறிக்கையின் பிரகாரம் அந்த பெறுமதி ரூபா 749,731,548 ஆகும். | திணைக்களத்தினால் வருமான அறிக்கைகள் தயாரிக்கப்பட்ட திகதியில் உள்ளபடியான கட்டண வருமானம் ரூபா 749,731,548 ஆகும். திறைசேரியின் கணிணி அச்சீட்டின் பிரகாரம் அந்த பெறுமதி ரூபா 858,103,568 ஆகும். வருமானம் அறிக்கையிடப்படுவதில் ஏற்பட்டுள்ள குறைபாடுகள் காரணமாக இந்த பெறுமதிகளை இணக்கம் செய்ய முடியாதுள்ளது. | வருமான அறிக்கைகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் இணக்கம் செய்தல் உரிய முறைகளில் மேற்கொள்ளப்பட வேண்டும் |
| (இ) | 2020 ஆம் ஆண்டிற்குரிய காணிகள் பதிவாளர் அலுவலகங்கள் 26 மற்றும் பிரதேச செயலக அலுவலகங்கள் 65 இன் மாதாந்த வருமான பொழிப்பு அறிக்கைகள் வழங்கப்பட்டிராமையால் ரூபா 1,399,877,263 தொகையான பதிவுக் கட்டண வருமானம் கணக்காய்வின் போது சான்றுபடுத்த முடியாதிருந்தது. | வருமான அறிக்கைகளை பிரதேச அலுவலகங்களிலிருந்து உரிய திகதிகளில் கிடைக்காமையால் கணிணி மென் பொருளின் மூலம் வருமான அறிக்கையிடும் நடைமுறையொன்றினை தயாரிப்பதற்கு கலந்துரையாடல் இடம் பெற்று வருகின்றது. | வருமான அறிக்கைகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் இணக்கம் செய்தல் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் நொத்தாரிசுகளுக்கு உச்ச நீதி மன்றத்தின் சான்றிதழ்களை வெளியீடு செய்யும் வருமானம் திறைசேரியின் கணிணி அச்சீட்டு பதிவுகள் மற்றும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 4,813,771 ஆக இருந்ததுடன் திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்ட ரூபா 672,000 தொகையில் | உரிய வருமான அறிக்கைகளை உரிய முறையில் பெற்றுக்கொள்ளாமையின் அடிப்படையில் இந்த நிலைமை உருவாகியுள்ளது. எதிர்காலத்தில் திருத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வருமான அறிக்கைகளை உரிய முறையில் பேண வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் உயர் நீதிமன்றங்களில் இருந்து சேகரிக்கப்படும் ரூபா 4,141,771 தொகையில் அந்த தொகை உள்ளடங்கி இருந்த போதிலும் உயர் நீதிமன்றங்களில் இருந்து வழங்கப்படும் சான்றிதழ்கள் தொடர்பான தகவல் அறிக்கைகளை இணங்காணுவதற்கு உரிய நடைமுறையொன்று திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிராமையால் அந்த வருமானத்தினை கணக்காய்வின் போது சான்றுபடுத்த முடியாதிருந்தது. | | |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பதிவு வருமானம் 858,103,568 ஆன போதிலும் அதனுள் உள்ளடக்கப்பட்ட உரித்து பதிவு வருமானம், மென் பிரதி கட்டணம் , அற்றோனிக் அனுமதிப்பத்திர கட்டணங்களாக ஏனைய பதிவு வருமானங்கள் தனித்தனியாக இணங்காணுவதற்கு தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | வருமானத்தினை தனித்தனியாக இணங்காண உரிய தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவவடிக்கை எடுக்கப்படுவதுடன் அறிக்கைகள் கிடைக்கும் முறைக்கேற்ப அவ்வப்போது நாளது வரையாக்கப்படுகின்றது. | வருமான அறிக்கைகளை உரிய முறையில் பேண வேண்டும். |

**1.6.2 வருமானமல்லாத பெறுவனவுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திரண்ட பரீட்சை மீதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 74,296,750 ஆன போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 74,721,885 ஆக பதிவு செய்யபபட்டுள்ளமையால் ஏனைய பெறுவனவுகள் ரூபா 425,135 இனால் மிகைக் கணக்கீட்டிற்கு உள்ளாகியிருந்தது. | மீள் செலுத்தல்கள் தவறுதலாக கழிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏனைய பெறுவனவுகளை சரியாக கணக்கு வைக்க வேண்டும். |

**1.6.3 அரசாங்க உத்தியோகத்திகளின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | திறைசேரியின் கணிணி அச்சீட்டு பதிவுகளின் பிரகாரமான உள்ளபடியான பெறுவனவுகளின் பெறுமதியானது ரூபா 54,346,605 ஆன போதிலும் திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் ஆண்டின் உள்ளபடியான பெறுவனவுகள் ரூபா 54,107,804 ஆனமையால் திணைக்களத்தின் புத்தகங்கள் மற்றும் திறைசேரியின் குறிப்பு ஆகியவற்றுக்கிடையே ரூபா 238,801 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | ஓய்வு பெற்றுச் சென்ற இரு உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் தவறுதலாக இரு தடவைகள் தீர்ப்பனவு செய்யப்பட்டடையால் ஏற்பட்ட தவறினை திருத்துதல். | திறைசேரியின் கணிணி அச்சீட்டு பதிவுகள் மற்றும் திணைக்களத்தின் புத்தகங்களை ஒப்பீட்டு சரியாக கணக்குகளை தயாரித்தல் |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் மற்றும் திறைசேரியின் கணிணி அச்சீட்டுக்களின் பிரகாரம் குறுக்கு பதிவுகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட வரவு வைத்தல்களின் 1,417,401 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | கடனை தீர்ப்பனவு செய்தல் மற்றும் சாட்டுதல் குறுக்கு பதிவுகளின் மூலம் மேற்கொள்ளும் போது திறைசேரியின் பதிவேடுகளில் ஏற்பட்ட தவறினை திருத்தும் போது இந்த வேறுபாடு அறிக்கையிடப்பட்டுள்ளது. | - மேற்படி - |

### 1.6.4 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான திணைக்களத்திற்கு சொந்தமான காணிகளின் பெறுமதி ரூபா 1,558,895,000 ஆன போதிலும் நிதிக்கூற்றுக்களில் காணிகளின் பெறுமதி உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களை திருத்துவதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் சரியான முறையில் உள்ளடக்கப்படுதல். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிதியல்லாத சொத்துக்களின் இறுதியில் உள்ளபடியான மீதி மற்றும் திறைசேரியின் நிதியல்லாத சொத்துக்களின் பொழிப்பு (Bos Summary) இன் பிரகாரம் அந்த மீதி ஆகியவற்றுக்கிடையே ரூபா 270,015,439 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | வகைப்படுத்தலின் போது ஏற்பட்ட வலுவொன்று என்பதால் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | சொத்துக்கள் சரியாக கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ஏனைய நிதியல்லாத சொத்துக்களின் ஆரம்ப மீதி மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கான திறைசேரியின் நிதியல்லாத சொத்துக்களின் பொழிப்பு (Bos Summary) இன் ஆரம்பமீதி ஆகியவற்றுக்கிடையே ரூபா 53,598,949 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | ஏனைய அமைச்சுக்களின் நிதியேற்பாட்டின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதிகளை சீராக்கம் செய்யப்பட்ட பின்னரும் இந்த வேறுபாடு நிலவுகின்றது. | வேறுபாட்டிற்கான காரணத்தை கண்டறிந்து திருத்துதல் |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது கொள்வனவுகள் மற்றும் மாற்றல்களின் மூலம் ரூபா 95,538,470 ஆன “ஏனைய இயந்திரங்கள் மற்றும் | நிதியல்லாத சொத்துக்கள் webInterface இற்கு உரிய திகதியில் நாளது வரையாக்க முடியாதிருந்தது. | சொத்துக்கள் உரிய முறையில் கணக்கு வைக்கப்படுதல். |

உபகரணங்கள் மற்றும் கட்புல சொத்துக்கள்'' சேகரிக்கப்பட்டிருந்த போதிலும் நிதியல்லாத சொத்துக்களின் பொறுப்பில் (Bos Summary) அந்த பெறுமதியானது ரூபா 7,983,402 ஆக பதிவு செய்யப்பட்டிருந்தது.

### 1.6.5 காசுப்பாய்ச்சல் கூற்று

---------------------------------------
பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காசுப்பாய்ச்சல் கூற்றின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாயியுள்ள காசுப்பாய்ச்சலினுள் உள்ளடங்கியுள்ள வருமானத்தின் கூட்டுப் பெறுமதியானது ரூபா 1,754,184,688 ஆன போதிலும் ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் அந்தப் பெறுமதி ரூபா 1,827,802,708 ஆனமையால் செயற்பாட்டு நடவடிக்கைளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல் ரூபா 73,618,020 இனால் குறைத்துக் கணிப்பிடப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் காசாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் பதிவு செய்யப்பட்டுள்ளமை. | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்குகளை தயாரித்தல். |
| (ஆ) | காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் முற்பணங்களின் அறவிடல் பெறுமதி ரூபா 3,216,396 ஆன போதிலும், திரண்ட பரீட்சை மீதியின் பிரகாரம் அந்த பெறுமதி ரூபா 54,346,605 ஆனமையால் முற்பண அறவீடல்கள் ரூபா 51,130,209 இனால் குறைத்து காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | குறுக்குப் பதிவுகளின் பெறுமதிகளை சீராக்கம் செய்யும் போது பரீட்சை மீதியின் பெறுமதியுடன் இணங்குகின்றது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிதி நடவடிக்கைகளில் இருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலினுள் வைப்பு பெறுவனவுகளாக ரூபா 3,901,600 கணக்கு வைக்கப்பட்டிருந்த போதிலும் ஒருங்கிணைந்த பரீட்சை மீதியில் அந்தப் பெறுமதி ரூபா 7,992,203 ஆக காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |

2. **நிதி மீளாய்வு**

2.1 **வருமான முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைந்த ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 1,605,000,000 ஆக இருந்ததுடன் உள்ளபடியான வருமானம் ரூபா 1,404,691,034 அல்லது வருமானத்தின் 88 சதவீதமாக இருந்தது. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளபடியான வருமானம் ஆகியவற்றுகிடையேயான வேறுபாடு 200,308,966 அல்லது 12 சதவீதம் ஆகும். | கொவிட் 19 தொற்று நோய் நிலைமையின் அடிப்படையில் வருமானம் சேகரித்தல் குறைவடைந்துள்ளது. | வருமானங்களை சரியாக மதிப்பீடு செய்தல் மற்றும் திருத்தியமைத்தல். |
| (ஆ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ளபடியான நிலுவை வருமானம் ரூபா 24,896,693 மற்றும் ஆண்டினுள் நிலுவையாக காணப்பட்ட ரூபா 3,137,710 எனும்மாறு ரூபா 28,034,403 தொகையான மொத்த நிலுவை வருமானத்தில் ஆண்டினுள் உள்ள அறவீடுகள் 1,311,326 அல்லது 4.7 சதவீதம் மாத்திரம் காணப்பட்டமையால் ஆண்டின் இறுதியில் உள்ளபடியான நிலுவை வருமானம் ரூபா 26,723,078 ஆகும். | நிலுவை வருமானத்தினை அறிக்கையிடும் போது தவறுதலாக தயாரிக்கப்பட்டு பதிவாளர் அலுவலகத்தினால் அனுப்பப்பட்டுள்ளது. அதனை திருத்தி சரியான பெறுமதிகள் கிடைத்த பின்னர் கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானங்களை சரியாக கணக்கு வைத்தல் |

**2.2 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 66/69 இன் கீழ் உரிய உத்தியோகத்தரினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளை மாற்றும் வரையில் எந்தவொரு செலவின விடயத்திற்கும் கூடுதலாக செலவினங்களை மேற்கொள்ளக் கூடாத போதிலும் திணைக்களத்தினால் போதியளவான நிதி ஏற்பாடு காணப்படாத 03 செலவின விடயங்களின் ரூபா 1,962,196 கூட்டுத் தொகையான செலவினங்கள் நிதியேற்பாடு எஞ்சியுள்ள செலவின விடயங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் அந்த செலவின விடயங்களுக்கு நிதியேற்பாடுகளை மாற்றிய பின்னர் வருமான செலவினம் மற்றும் தவறுதலை திருத்துவதாக பதிவு செய்யபட்டு சரியான செலலவின விடயங்களில் அந்த செலவினம் பதிவு செய்யப்பட்டிருந்தது. | அத்தியாவசியமான செலவினங்களை மேற்கொள்ள நிதியேற்பாடு இல்லாதிருந்தமையால் குறித்த செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | தொடர்படைய பிரமானத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) 2020 ஆண்டின் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் 2 மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 7,037,000 ஆக காணப்பட்டதுடன் 2020 திசெம்பர் மாதத்தில் உள்ளபடியான தேறிய செலவினம் ரூபா 4,987,379 ஆகும். அதன் பிரகாரம் தேறிய நிதியேற்பாட்டின் 71 சதவீதம் 2020 திசெம்பர் மாத்திலேயே செலவிடப்பட்டிருந்தது. | நாட்டில் நிலவிய பாதகமான நிலைமையின் அடிப்படையில் உரிய முறையில் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்தமை | நிதியேற்பாடுகளில் செயற்திறனாகவும் ஆக்கபூர்வமானதாகவும் பயன்படுத்தல். |

| | | |
|---|---|---|
| (இ) 2020 ஆம் ஆண்டின் போது திணைக்கதள்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளில் 05 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 04 மூலதன செலவின விடயங்களில் தேறிய நிதியேற்பாடு ரூபா 43,035,000 ஆக காணப்பட்டதுடன் உள்ளபடியான செலவினம் ரூபா 26,014,829 ஆகும். அதன் பிரகாரம் சேமிப்பு 26 சதவீதம் முதல் 89 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | கொவிட் 19 தொற்று நோய் காரணமாக போதியளவான கட்டு நிதியை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தமை | - மேற்படி - |
| (ஈ) 2020 ஆம் ஆண்டின் போது செலவிடக் கூடிய மொத்த நிதியேற்பாட்டில் 59 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. | முதலாவதாக அங்கீகரிக்கப்பட்ட ரூபா 37 மில்லியனில் ரூபா 12 மில்லியன் செலவிடப்பட்டுள்ள போதிலும் இரண்டாவதாக அங்கீகரிக்கப்பட்ட ரூபா 14 மில்லியனில் ரூபா 13.9 மில்லியனும் இறுதியாக அங்கீகரிக்கப்பட்ட ரூபா 10 மில்லியனும் முழுமையாக செலவிடப்பட்டள்ளன. | - மேற்படி - |

**2.3 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 50,596,314 ஆன போதிலும் 2021 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்த பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 30,394,918 ஆகும். | திணைக்களத்தினால் செலுத்தப்படும் பதிவுத் பதிவாளர் கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் இந்த பொறுப்புக்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்படுவதில்லை. | பொறுப்புக்களை கணக்கு வைத்தல் மற்றும் தீர்ப்பனவு செய்தலை முறைமைப்படுத்துதல் |

**2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) பிரிவு மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் 10.2 ஆம் பந்தி | 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிராமை. | வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ாப்பிப்பதற்கு பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்கியிருத்தல். |
| (ஆ) | 2006 இன் 12 ஆம் இலக்க மற்றும் 2008 இன் 10 ஆம் இலக்க முத்திரைக் கட்டணங்கள் (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச் சட்டம். | நொத்தாரிசுகளின் வருடாந்த உயர் நீதிமன்ற சான்றிதழ்களை வெளியீடு செய்யும் கட்டணத்தை அறவிடும் போது நொத்தாரிசாக செயற்படுவதற்காக முதற் தடைவை அனுமதிப்பத்திரம் ஒன்றை வெளியிடுவதற்காக அறவிடப்படும் முத்தரைக் கட்டணம் நிறைவடைந்து எதிர்வரும் காலாண்டில் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்த முத்திரைக் கட்டணத்தின் பெறுமதியை இணங்காணுவதற்கு உரிய தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்கள் சேவைக்கு அறிக்கை இடாமையினாலும் பணியில் நிறைவேற்றுவதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வருமானங்கள் மற்றும் செலவினங்களை சரியாகவும் நாளது வரையாகவும் கணக்கு வைத்தல் கணக்காய்விற்கு உரிய தகவல்களை தாமதிக்காது பெற்றுக்கொடுத்தல் |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | நிதிப்பிரமாணம் 94(1) மற்றும் 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை | அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டு எல்லைகளை மீறி செலவினமொன்று அல்லது கடப்பாடு ஒன்று ஏற்படுத்தப்பட கூடாத போதிலும் திணைக்களத்தின் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை சுவீகரிக்கும் போது அங்கீகரிக்கப்பட்ட நிதிஏற்பாட்டு எல்லையினை விஞ்சி ரூபா 38,881 ஆன பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. மேலும் முறையே ரூபா 1,035,772 ஆன மற்றும் ரூபா 1,564,595 ஆன மேலதிக நேர மற்றும் விருப்பு சம்பளங்கள் (1002) மற்றும் ‘‘ஏனைய படிகள்’’ (1003) கடப்பாடுகளாக இணங்காணப்பட்டிருந்தது. | போதியளவு கட்டு நிதி கிடைக்காமையால் இந் நிலைமை ஏற்பட்டுள்ளது. மீண்டும் இவ்வாறானதொரு நிலைமை ஏற்படுவதினை தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிதியேற்பாடு எஞ்சியிருந்த போதிலும் திறைசேரியிலிருந்து கட்டு நிதி கிடைக்காமை. | தொடர்புடைய பிரமாணங்களுடன் இணங்கி நடத்தல் |
| (ஈ) | 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தி | 2020 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 29,893,331 கூட்டுத்தொகையான மற்றும் மாற்றல்கள் மூலம் கிடைத்த ரூபா 65,645,139 பெறுமதியான நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் கொன்ரோலர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏனைய திணைக்களங்களின் நிதி ஏற்பாடுகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சீராக்கல்கள் கணக்குளில் சீராக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் கொன்ரோலர் நாயகத்திற்கு அனுப்பப்படவில்லை. சீராக்கம் மேற்கொள்ளப்பட்டு குறித்த அறிக்கைகள் அனுப்பப்படும். | சுற்றறிக்கை அறிவுரைகளின் பிரகாரம் செயற்படல். |
| (உ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் வழிகாட்டி இலக்கம் 06 இன் 07 ஆம் பந்தி | நிதிச்செயலாற்றல் கூற்றின் பிரகாரம் திறைசேரிக்கு தீர்ப்பனவு செய்ய வேண்டிய அல்லது திறைசேரியிலிருந்து பெற வேண்டிய பெறுமதி மற்றும் காசுப் புத்தகத்தின் பிரகாரம் அந்தப் பெறுமதியை இணக்கம் செய்வதற்காக கட்டு நிதி சீராக்கல் கணக்கொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு பதிலாக | கட்டு நிதி கணக்கு சீராக்கல் கணக்கு தொடர்பில் போதிய அறிவொன்று இல்லாதிருந்தமையால் எதிர்காலத்தில் சரியாக தயாரித்து சமர்ப்பிக்கின்றேன். | தொடர்புடைய சுற்றறிக்கைகளுக்கு இணங்க செயற்படுத்தல். |

| | | |
|---|---|---|
| | திணைக்களத்திற்காக கட்டு நிதி மற்றும் கட்டு நிதி மீதிக்கு எனும் பெயர்களில் இரு கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்தன. அது தொடர்பில் 2019 ஆம் ஆண்டிற்கான பொழிப்பு அறிக்கையிலும் சுட்டிக் காட்டப்பட்ட போதிலும் இந் வருடத்திலும் குறித்த சீராக்கல் கணக்கு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | |

**2.5 முற்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு செய்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டின் அரச உத்தியோகத்தர்களின் முற்பண ''பீ'' கணக்கின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் மரணமடைந்த உத்தியோகத்தர், ஓய்வு பெறுதல், பணி வரிதாக்கப்படுதல் சேவையை விட்டுச் செல்லல் மற்றும் சேவையிலிருந்து நீக்கப்படுதல், காரணங்களின் அடிப்படையில் 51 உத்தியோகத்தரின் 1 முதல் 29 வருடங்கள் வரையிலும் அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட மொத்த மீதி 3,239,780 ஆகும். | எஞ்சிய கடன் மீதிகளை அறவிடுவதற்கு மற்றும் பதிவழிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | தாபண விதிக் கோவையின் பிரகாரம் கடனை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வாகன குழாமில் 41 வாகனங்கள் காணப்படுவதுடன் அவற்றுள் 23 | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | வாகன நிர்வாகத்தை முறைமைப்படுத்துதல் |

| | | | |
|---|---|---|---|
| | வாகனங்கள் திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 17 வாகனங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் 2020 ஆம் ஆண்டின் போது கையளிக்கப்பட்படிருந்த போதிலும் அவற்றுள் 6 வாகனங்கள் மாத்திரம் 2020 ஆம் ஆண்டின் போது ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன | | |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிராத ரூபா 2.3 மில்லியன் கிரயமான இலக்கம் 254–1061 கொண்ட வான் வண்டி பழுதுபார்க்கப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்க கூடிய நிலையில் காணப்பட்ட போதிலும் இது வரையிலும் பழுது பார்த்தல்கள் இடம் பெற்றிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனையின் பின்னரும் 12 மாத காலத்தின் பின்னர் அல்லது 25,000 கிலோ மீற்றர்கள் தூரம் வாகனம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட பின்னர் அல்லது எஞ்சினுடன் தொடர்புடைய பிரதான பழுது பார்த்தல்கள் ஒன்றின் பின்னர் ஆகிய காரணங்களில் முதலில் ஏற்படும் சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2019 ஆம் ஆண்டின் பின்னர் வாகனங்களில் எரிபொருள் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - |
| (ஈ) | 2006 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட PB – 4896 ஆம் இலக்க மற்றும் PB 4888 ஆம் இலக்க முடைய இரு வாகனங்கள் 2018 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டிற்கு கீழ் | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்படாதிருந்ததுடன் இந்த வாகனங்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாத நிலையில் உள்ளதாக திணைக்களத்தின் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த வாகனங்களை கைதவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கபபட்டிருக்கவில்லை. | | |
| (உ) | 2006 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3.2 மில்லியன் கிரயமான இலக்கம் PB-4897 மற்றும் இலக்கம் PB-4899 கொண்ட இரண்டு மைக்றோ கப்க்கள் பழுத பார்த்தலுக்கு உரிய உதிரிப்பாகங்கள் இல்லையென குறிப்பிடப்பட்டு 2019 ஆம் அண்டு முதல் பயன்படுத்தப்படாதுள்ளதுடன் அந்த வாகனங்கள் தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி |

**4.** **மனிதவள முகாமைத்துவம்**

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------ | ---------------------------- | ----------------- |
| (அ) | 2011 ஏப்ரல் 04 ஆந் திகதிய DMS/C/5/30/02 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள கடிதத்தின் பிரகாரம் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவிணயினுள் உள்ளடக்கப்பட்ட சிரேஷ்ட முகாமைத்துவத்தின் 06 பதவிகளின் 26 வெற்றிடங்கள் நீண்ட காலமாக நிலவின. பதிவாளர் நாயகத்தின் பதவியும் 2017 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்பட்டதுடன் அவ்வப்போது பதிற்கடமை | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | மனிதவள முகாமைத்துவத்தினை முறைமைப்படுத்துதல் |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் பணி மேவுகை அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தமையால் திணைக்களத்தின் பதவியணிக்கு இது பாதகமான முறையில் தாக்கமளிக்க கூடும் என அவதானிக்கப்பட்டது. 2021 பெப்ரவரி மாத்தின் போது பதிவாளர் நாயகம் ஒருவர் நிரந்தரமாக நியமிக்கபப்ட்டிருந்தார். | | |
| (ஆ) | திணைக்களத்தின் மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலைகளிலான 241 பதவிகளும் மீளாய்வாண்டின் இறுதியில் வெற்றிடமாக காணப்பட்டது. திணைக்களத்தின் பிரதான பணிக்கு நேரடியாக தொடர்புறும் காணிகள் பதிவாளர்களின் 30 வெற்றிடங்களும் இதில் உள்ளடங்கியுள்ளது . | - மேற்படி - | - மேற்படி - |